සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

தென் மாகாணக் கல்வித் திணைக்களம்

Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2025

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025 / Second Term Test - 2025

ශ්‍රේණිය / தரம் / Grade : 09

விஞ்ஞானம் I, II

කාලය / நேரம் / Time : 02 மணி

නම / பெயர் / Name : ..............................................................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. : ......................................

## பகுதி (I)

❖ *சரியான விடையின் கீழ் கோடிடுக.*

1) *கல ஒழுங்கமைப்பை கொண்டிராததும், உயிருள்ள மற்றும் உயிரற்ற இயல்புகளை காட்டக் கூடியதுமான நுண்ணங்கிக் கூட்டம் எது ?*

1) பற்றீரியா 2) பங்கசு 3) வைரசு 4) புரோட்டோசோவா

2) *கீழே படத்தில் காட்டப்பட்டுள்ள நுண்ணங்கிக் கூட்டங்களை முறையே காட்டும் விடை எது ?*




1) பங்கசு , புரோட்டோசோவா , அல்கா 2) பற்றீரியா , வைரசு , பங்கசு

3 பற்றீரியா , அல்கா , புரோட்டோசோவா 4) பங்கசு , அல்கா , புரோட்டோசோவா

3) *மனிதக் காதில், நடுக்காதின் கட்டமைப்பு பகுதியொன்று பின்வருவனவற்றுள் எது ?*

1) ஊத்தோக்கியாவின் கால்வாய் 2) நத்தைச் சுருள்

3) செவி நரம்பு 4) செவிப்பறை மென்சவ்வு

4) *பார்வைக் குறைபாடொன்று நிவர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் விம்பம் தோன்றுவதைக் காட்டும் கதிர்வரிப் படத்திற்கேற்ப பார்வை குறைபாட்டு வகையினையும் நிவர்த்தி செய்ய அணிய வேண்டிய வில்லை (X) ஐயும் சரியாகக் குறிக்கும் விடை*




1) அண்மைப் பார்வை - குவிவுவில்லை

2) சேய்மைப் பார்வை - குவிவுவில்லை

3) அண்மைப்பார்வை - குழிவுவில்லை

4) சேய்மைப் பார்வை - குழிவுவில்லை

5) *கறுவா இலையிலிருந்து கறுவா எண்ணெயை வேறாக்குவதற்கு பயன்படுத்தப்படும் பௌதிக முறை எது ?*

1) பகுதிபட காய்ச்சி வடித்தல் 2) கொதிநீராவிக் காய்ச்சி வடித்தல்

3) அரித்தல் 4) பளிங்காக்குதல்

6) *ஏகவின கலவை, பல்லினக் கலவை என்பவற்றுக்கான உதாரணங்களை முறையே,*

1) உப்புக் கரைசல், கடல் நீர் 2) சீமெந்து சாந்து , கலங்கல் நீர்

3) சீனிக்கரைசல் , கலங்கல் நீர் 4) பழச்சலாது , சீனிக்கரைசல்

7) *விசை ஒரு " காவிக்கணியம் " என குறிப்பிடப்படுவது ஏன் ?*

1) பருமனை மட்டும் கொண்டுள்ளதால் 2) பருமனையும் திசையையும் கொண்டுள்ளதால்

3) திசையை மட்டும் கொண்டுள்ளதால் 4) மேற்கூறிய எதுவுமல்ல.

8) 60 N *நிறையுள்ள பொருளொன்றின் மீது* 20 N *நிறையுள்ள இரும்பு குண்டொன்றை வைக்கும் போது நிலத்தின் மீது ஏற்பத்தப்படும் அமுக்கம் யாது ?*




1) $\frac{60\ N}{2\ m\times 1\ m}$ 2) $\frac{60\ N}{2\ m\times 0.5\ m}$

3) $\frac{80\ N}{2\ m\times 1\ m}$ 4) $\frac{80\ N}{1\ m\times 0.5\ m}$

9) குருதியின் கூறுகளையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் சரியாகக் காட்டியுள்ள விடையைத் தெரிவு செய்க.

1) செங்குருதிக் கலம் - குருதியை உறையச் செய்தல்
2) வெண்குருதிக் கலம் - ஒட்சிசனை கொண்டு செல்லுதல்
3) குருதிச் சிறுதட்டு - நோய்க்காரணிகளை அழித்தல்
4) செங்குருதிக் கலம் - ஒட்சிசனை கொண்டு செல்லுதல்

10) உயிரியல் தோற்றுவாய் தொடர்பாக உள்ள கொள்கைகளில் விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கை,

1) அண்டவெளி பிறப்புக் கொள்கை
2) சிறப்புப் புடைப்புக் கொள்கை
3) உயிரிரசாயனக் கூர்ப்புக் கொள்கை
4) தன்னிச்சைப் பிறப்பாக்கக் கொள்கை

11) பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1) சுவாசப்பை நாளங்கள் இடது சோனையறையில் திறக்கின்றன.
2) சோனை அறைக்கும் இதய அறைக்கும் இடையே அரைமதி வால்வு காணப்படும்.
3) AB குருதி வகையைக் கொண்டவர் சர்வ வாங்கி எனப்படுவர்.
4) நாடிகளின் சுவர்கள் மீள் தன்மையுடையவை.

12) மரத்திலுள்ள காய்கள் முதிர முன் உதிர்வதைத் தடுப்பதற்கு விவசாய துறையில் பயன்படுத்தப்படும் செயற்கை வளர்ச்சி சீராக்கிப் பதார்த்தம் எது?

1) இன்டோல் அசற்றிக்கமிலம்
2) இன்டோல் பியுற்றிக்கமிலம்
3) நப்தலீன் அசற்றிக்கமிலம்
4) சைற் றோசெல்

13) நேர் இரசாயன திரும்ப அசைவுக்கு உதாரணமாகக் கொள்ளக் கூடியது,

1) தாவர வேர் பசளை இருக்கும் இடத்தை நோக்கி வளர்தல்
2) தாவர வேர் நிலத்தை நோக்கி வளர்தல்
3) தொட்டாற் சுருங்கி இலையைத் தொட்டதும் இலைகள் கூம்புதல்
4) கொடித் தோடையின் தந்து ஆதாரத்தைச் சுற்றி வளர்தல்

14) புவியின் ஆரம்ப உயிரியாகக் கருதப்படுவது,

1) தனிக்கல காற்று வாழ் பக்றீரியா
2) தனிக்கல காற்றின்றி வாழ் பக்றீரியா
3) தனிக்கல அல்கா
4) பல்கல நிடாரியாக்கள்

15) அமிலம் துமிக்கப்பட்ட நீரை மின்பகுப்பு செய்யும் போது, நேர் மின்வாய் அருகில் வெளியேறும் வாயுவை சோதனைக் குழாயில் சேகரித்து அதன் உள்ளே தணற்குச்சி ஒன்றை செலுத்தும் போது பிரகாசமாக எரிந்தது. அவ் வாயு,

1) ஒட்சிசன் ஆகும்
2) ஐதரசன் ஆகும்
3) நைதரசன் ஆகும்
4) மேற்கூறிய எதுவுமன்று

16) ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட 2 kg திணிவுடைய மூன்று வகையான திரவங்களின் கனவளவுகள் கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளது.




மேற்கூறிய A,B,C ஆகிய திரவங்களின் அடர்த்தி அதிகரித்துச் செல்லும் ஒழுங்கினை சரியாகக் குறிப்பது எது ?

1) $A < B < C$
2) $C < A < B$
3) $C < B < A$
4) $A < C < B$

17) திரவமொன்றின் அடர்த்தி தொடர்பான இரண்டு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - திரவமொன்றின் அடர்த்தி , திரவத்தின் வகையில் தங்கியுள்ளது.

B - திரவமொன்றின் அடர்த்தி , அதன் திணிவில் தங்கியுள்ளது.

1) A மட்டும் சரியானது
2) B மட்டும் சரியானது
3) A யும் B யும் சரியானது
4) A யும் B யும் பொய்யானது

18) இலங்கைக்கு மட்டும் உரித்தான சுதேச விலங்கினம் ஒன்று **அல்லாதது**

1) காட்டுக் கோழி
2) செவ்வுடற் பூங்குயில்
3) யானை
4) மரங்கொத்திப்பாம்பு



සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

19) உயிர் பல்வகைமை தொடர்பாக குறைந்தளவு பாதிப்புச் செலுத்தும் செயற்பாடு எது?
   1) ஆக்கிரமிப்பு உயிரினங்கள் நிலைபேறடைதல்
   2) சூழல் வளங்களின் மிகையான பயன்பாடு
   3) சேதனப் பசளையை பயன்படுத்தி விவசாயம் செய்தல்
   4) சுவட்டு எரிபொருளின் தகனம் அதிகரித்தல்

20) உணவைப் பாது காப்பதற்கும் , உணவு விரயத்தை குறைப்பதற்கும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை ஒன்று **அல்லாதது,**
   1) விஞ்ஞான முறைப்படி விளைச்சலை அறுவடை செய்தல்.
   2) பயிர் விளைச்சலை முறையான விதத்தில் ஒழுங்கு செய்தல்
   3) மேலதிகமான விளைச்சலை நற்காப்பு செய்தல்
   4) உணவு நுகரும் அளவை மட்டுப்படுத்தல்.

## பகுதி II

❖ **முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.**

01. (A) நகர அபிவிருத்தி அதிகார சபையால் பராமரிக்கப்படும் நகரத்தை அலங்கரிக்கும் சூழல் நேயமிக்க பூங்காவொன்றைப் படம் காட்டுகிறது.




(i) உயிர்வாயு உற்பத்தியாக்கியில் X எனப் பெயரிடப்பட்டுள்ள பகுதியால் உள்ளே செலுத்தப்படும் பதார்த்தங்கள் 2 தருக.

(ii) Y பகுதியினூடாக வெளியேறும் வாயுவில் அடங்கியிருக்கும் பிரதான கூறு எது ?

(iii) உயிர் வாயு உற்பத்திக்கு பங்களிப்பு செய்யும் நுண்ணங்கிக் கூட்டத்தைப் பெயரிடுக.

(iv) உயிர் வாயுவின் பயன் ஒன்று தருக.

(v) உயிர் வாயு உற்பத்தியாக்கி உபகரணத்தின் மூடியின் மீது நீர் இடப்படுவதால் கிடைக்கும் அனுகூலம் யாது?

(B) பூங்காவின் ஊழியர்களினால் சில மரங்கள் கத்தரிக்கப்படுகின்றன.

(i) இவ்வாறு வெட்டி அகற்றப்படுவது தாவரத்தின் எந்தப் பகுதியாகும் ?

(ii) (a) வெட்டி அகற்றப்பட்ட தாவரப் பகுதியில் உற்பத்தியாகும் தாவர வளர்ச்சிப் பதார்த்தம் எது ?
   (b) அந்த வளர்ச்சிப் பதார்த்தத்தினால் ஆற்றப்படும் தொழிலொன்றைத் தருக.

(iii) தாவரங்களைக் கத்தரித்த பின்னர் தாவரங்களில் ஏற்படும் மாற்றம் யாது ?

(iv) அலங்கார தாவர வளர்ப்பில் தண்டுத் துண்டங்களில் விரைவாக வேர் கொள்ளச் செய்வதற்கு பயன்படுத்தப் படும் செயற்கை வளர்ச்சிப் பதார்த்தமொன்றை பெயரிடுக.

(C) அலங்காரத்திற்கு மாத்திரமின்றி விவசாயத்திற்கும் பெறுமதி சேர்க்கும் அநேக தாவரங்கள் இப்பூங்காவில் காணப்படுகின்றன.

(i) வைரம் செறிந்த மற்றும் வைரம் குறைவான தண்டுடைய தாவரங்களுக்கு முறையே 2 உதாரணங்கள் தருக.

(ii) வைரம் செறிந்த தண்டுடைய தாவரங்களில் தாங்கும் இழையக் கலங்களில் அதிகமாகப் படிவடைந்து காணப்படும் இரசாயன பதார்த்தங்கள் இரண்டு தருக.

(iii) (a) ஒளியை நோக்கி தாவரத் தண்டின் உச்சி வளைந்து வளர்ச்சியடைந்து காணப்பட்டது. இது எவ்வகையான தாவர அசைவாகும் ?
   (b) மேலே கூறிய தாவர அசைவை தவிர்ந்த மற்றைய தாவர அசைவை பெயரிட்டு உதாரணமும் தருக.

(iv) இந்த தாவர அசைவு முறைகள் இரண்டிற்கும் இடையிலான வேறுபாடொன்று தருக.

PAST PAPERS WIKI

02. (A) கீழே படத்தில் காட்டியவாறு போத்தலில் அரைவாசிக்கு நீரை நிரப்பி நுரைப் பஞ்சுத் துண்டொன்றின் (ஸ்பொன்ஞ்) மேல் வைத்து அளவுத் திட்டத்தில் காட்டியின் அமைப்புக்கு ஏற்ப வாசிப்பு பெறப்படும்.




(i) (a) இந்த போத்தலை முற்றாக நீரால் நிரப்பி நுரைபஞ்சுத் துண்டின் மேல் வைக்கும் போது அளவுத்திட்டத்தில் பெறப்படும் வாசிப்புக்கு யாது நிகழும் ?

(b) அதற்கான காரணம் என்ன ?

(ii) இந்த செயற்பாடு அமுக்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் எந்தக் காரணியை எடுத்துக் காட்டுகிறது ?

(iii) மேலே கூறிய காரணியைத் தவிர அமுக்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் மற்றைய காரணி எது ?

(iv) மேலே (iii) ல் கூறிய காரணியின் செல்வாக்கை எடுத்துக் காட்டுவதற்கு மேலேயுள்ள செயற்பாட்டில் செய்ய வேண்டிய மாற்றம் யாது ?

(v) மேலே (iii) ல் கூறிய காரணியை தேவைக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொள்ளும் சந்தர்ப்பமொன்றுக்கு உதாரணங்கள் 2 தருக.

(B) அன்றாட வாழ்வில் பல்வேறு வேலைகளை செய்து கொள்வதற்காக "விசை" பிரயோகிக்கப்படுகிறது.

(i) விசையைப் பிரயோகிப்பதன் மூலம் பொருளொன்றின் மீது ஏற்படுத்த முடியுமான மாற்றங்கள் 2 தருக.

(ii) நிலத்தில் இருந்து மேல் நோக்கிச் செல்லும் போது பொருளொன்றின் நிறை படிப்படியாகக் குறைவடையும்.

(a) பொருளொன்றின் நிறை என்றால் என்ன ?

(b) நிறையை அளவிடும் நியம அலகு யாது ?

(iii) நிலத்தில் இருந்து மேல்நோக்கிச் செல்லும் போது பொருளொன்றின் நிறை படிப்படியாக குறைவடைவதற்கான காரணம் யாது ?

03. (A) "குருதி சுற்றோட்டத் தொகுதி" என்ற பாடத்தினைக் கற்ற மாணவன் ஒருவன் வரைந்த மாதிரிக் கட்டமைப்பு ஒன்று கீழே காட்டப்பட்டுள்ளது.




(i) B,C எனும் இரண்டு அறைகளுடனும் தொடர்புடைய X,Y எனும் குருதிக் குழாய்களை முறையே பெயரிடுக.

(ii) சுவாசப்பை இழையங்களின் கலங்களுக்கிடையே குருதியைக் கொண்டு செல்லும் குருதிக் குழாய் வகையின் பெயரைக் குறிப்பிடுக.

(iii) B,D எனும் இரு அறைகளுக்குமிடையே காணப்படும் வால்வினை பெயரிடுக..

(iv) X,Y குருதிக் கலன்களுக்கிடையேயான வேறுபாடொன்றைத் தருக.

(B) பார்வைப் புலனை உணரும் அங்கம் "கண்"ஆகும்.

(i) (a) பொருளொன்றின் விம்பத்தை விழித்திரையின் மீது குவியச் செய்யும் கண்ணின் கட்டமைப்பு எது ?

(b) மேற்கூறிய கட்டமைப்பு ஆக்கப்பட்டுள்ள புரதம் நார்த்தன்மையடைவதனால் கண்ணில் ஏற்படும் நோய் யாது ?

(ii) பார்வை குறைபாடுள்ள மாணவனொருவனை பரிசோதித்த கண் வைத்தியர் மாணவனின் கற்கோளம் குறுகி இருப்பதாகவும் கண் வில்லையின் வளைவை அதிகரிக்க முடியாமல் இருப்பதாகவும் கூறினார்.

(a) இம்மாணவனில் காணப்படும் பார்வைக் குறைபாடு யாது?

(b) கண் வைத்தியர் அம்மாணவனுக்கு சிபார்சு செய்த மூக்குக் கண்ணாடியில் பொருத்த வேண்டிய வில்லை வகை எது?

(iii) பார்வை நரம்பு சேதமடைவதால் குருட்டு நிலைமை ஏற்படும் என வைத்தியர் கூறினார். இக்கூற்றினை விளக்குக.

04. (A) பல்வேறுபட்ட அடர்த்தியுடைய திரவங்களையும் சில பொருட்களையும் பயன்படுத்தி முகவை ஒன்றில் ஒழுங்கமைப்பொன்று உருவாக்கப்பட்டது.




(i) படத்தில் உள்ளவாறு இந்த ஒழுங்கமைப்பை அமைக்கும் போது கருத்தில் கொள்ளப்பட்ட திரவங்களின் அடர்த்தி வித்தியாசம் தவிர்ந்த மற்றுமொரு இயல்பைக் குறிப்பிடுக.

(ii) மகோகனி பலகைத் துண்டு மண்ணெண்ணெய் மீது மிதக்காமல் நீரின் மீது மிதப்பதற்கான காரணம் யாது?

(iii) 900 $kg\ m^{-3}$ அடர்த்தியுடைய தேங்காய் எண்ணெய்யின் 1.5 $m^3$ கனவளவின் திணிவைக் காண்க.



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

(B) சில பதார்த்தங்களின் திணிவையும் கனவளவையும் அளந்து கொண்ட பின்பு அதன் மூலம் அடர்த்தியைக் கணித்துக் கொள்ள முடியும்.

(i) அடர்த்தி என்றால் என்ன ?

(ii) கீழே தரப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்தி அமைத்துக் கொள்ளக்கூடிய எளிய நீரமானியின் படத்தை வரைந்து பகுதிகளுக்குப் பெயரிடுக. (பானக் குழாய், மெழுகுவர்த்தி, இரும்பு கோளங்கள்)

(iii) இவ்வாறு அமைக்கப்பட்ட நீரமானி நீரிலும் தேங்காய் எண்ணெய்யிலும் அமிழ்ந்து மிதக்கும் விதத்தை வரைந்து காட்டுக.

(iv) அன்றாட வாழ்வில் நீரமானி பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் ஒன்றைத் தருக.

05. (A) பதார்த்தங்கள் ஆக்கப்பட்டுள்ள மிகச் சிறிய துணிக்கை “அணு” எனப்படும்.

(i) அணுவின் பெரும்பாலான பகுதி வெறுமையானதாகவும், அதன் மையப்பகுதியில் காணப்படும் கரு நேரேற்றத்தைக் கொண்ட தெனவும் முதன்முதலில் கருத்து வெளியிட்ட விஞ்ஞானி யார் ?

(ii) கருவில் காணப்படும் உப அணுத்துணிக்கைகளைப் பெயரிடுக.

(iii) பின்வரும் அட்டவணையில் A முதல் G வரையிலான இடைவெளிகளுக்குப் பொருத்தமான பெறுமானத்தை எழுதுக.

| மூலகம் | புரோத்தன் | இலத்திரன் | நியுத்திரன் | அணுவெண் | திணிவெண் |
|---|---|---|---|---|---|
| F புளோரீன் | 9 | A | 10 | B | C |
| Br புரோமீன் | 35 | E | F | G | 80 |

(iv) புரோமினின் அணுவெண்ணையும் திணிவெண்ணையும் நியம முறையில் எழுதிக் காட்டுக.

(B) இரும்பு ஆணியொன்றின் மீது செம்பினை படியச் செய்வதற்கு அமைக்கப்பட்ட ஒழுங்கமைப்பை கீழே தரப்பட்டுள்ள படம் காட்டுகிறது.




(i) இந்த ஒழுங்கமைப்பில் நேர் மின்வாயையும், மறை மின்வாயையும் முறையே எழுதுக.

(ii) இந்தப் பரிசோதனையுடன் தொடர்பான அவதானங்கள் 2 தருக.

(iii) உலோக முலாமிடல் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியம் ஒன்று தருக.

06. (A) ஆதிகாலத்தில் அகிலத்தின் பிறப்புத் தொடர்பாக பல்வேறு கொள்கைகள் நிலவின .

(i) அகிலத்தின் பிறப்புத் தொடர்பாக முதலில் கூறப்பட்ட விஞ்ஞான ரீதியிலான கொள்கை எது ?

(ii) எமது ஞாயிற்றுத் தொகுதி, வெள்ளுடுத் தொகுதியில் எங்கு அமைந்துள்ளது ?

(iii) புவியில் உயிரின் தோற்றம் தொடர்பாக விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படாத கொள்கை ஒன்றைக் குறிப்பிடுக.

(iv) உயிர் - கூர்ப்பு என்றால் என்ன ?

(v) கூர்ப்பு தொடர்பான முடிவுகளுக்கு வரும்போது கருத்தில் கொள்ளப்படும் சான்றுகள் 2 தருக.

(B) புவி உருவாகிய காலம் முதல் சகல அம்சங்களும் இயற்கையிலேயே உருவாக்கப்பட்டன. எனினும் மனிதன் தோன்றியபின் செயற்கைச் சூழல் உருவாக்கப்பட்டது.

(i) செயற்கைச் சூழல் தொகுதிகள் 2 ஐ பெயரிடுக.

(ii) நீர் காப்பிற்கு தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முறையொன்றைத் தருக.

(iii) பசுமைக் கட்டம் நிர்மாணிக்கும் போது பின்பற்ற வேண்டிய அடிப்படைத் தத்துவங்கள் 2 தருக.

(iv) எமது சகல செயற்பாடுகளின் போதும் பிரதான பச்சை வீட்டு வாயுவான காபனீரொட்சைட்டு விடுவிக்கப்படுகிறது. $CO_2$ வாயு விடுவிக்கப்படுவதைக் குறைப்பதற்கு பாடசாலை மாணவனாகிய உம்மால் எடுக்க முடியுமான ஒரு நடவடிக்கையை எழுதுக.

# 9 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් SHORT NOTES




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 350

## 9 ශ්‍රේණිය ඉංග්‍රීසි මාධ්‍ය කෙටි සටහන් පොත්
## ENGLISH MEDIAM SHORT NOTE BOOKS




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.

LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY VISA mastercard KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE